10வது ஆண்டில்

விளம்பரம்
VLAMBARAM™

(416) 282-8059
(416) 282-4978

# உலக தமிழோசை
ULAKA THAMILOSZAI

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 10 MARCH 15, 2000 பாலம் 06

❊ மனிதமூளையை கணணி பிரதியீடு செய்யுமா? (பக். 2)
❊ பிள்ளையின் வளர்ப்பில் யாருக்குக் கூடிய பங்கு (பக். 5)
❊ வாகனத்தின் துருப்பிடிப்பை தவிர்க்க.....(பக். 3)
❊ சந்திரன் எவ்வாறு தோன்றியிருக்கலாம் ? (பக்.9)
❊ சுஜாதாவின் முதல் படமும் வெற்றி (பக். 7)
❊ அல்சர் வியாதியை மாற்ற என்ன செய்யலாம் (பக். 4)
❊ Magic Bowler என அழைக்கப்படுவர் யார்? (பக். 6)
❊ Gas விலை வீட்டின் விலையைப் பாதிக்குமா? (பக். 17)



RE/MAX Crossroads Realty Inc., REALTOR
Independently Owned and Operated

வீடு வாங்க, விற்க
பூரண ஆலோசனை பெற

Raja M. Mahendran, P. Eng.
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME
MEMBER OF RE/MAX PLATINUM CLUB

(416) 491-4002
Pager: (416) 589-4270

இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்

சபோனாவிற்கு!
*Sabona & Gift*

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151

*Markham / Eglinton*

(கலைமகள் புத்தக நிலையத்திற்கு உள்ளே)

## அருள் விருந்து

*-செ. சிவசுப்பிரமணியம்*

- வெறி பிடியாத ஊக்கமுடையவரே உயர்ந்த காரியங்களைச் சாதிக்க முடியும்.
- தலைவனாக வேண்டுமென்று விரும்பித் தட்டமிழந்து போனவர் பலர் உண்டு.தலைவனாக விரும்பாதே தொண்டனாக விரும்பு.
- மெய்யன்பு நம்மிடத்து இருக்குமானால், இறைவனுடைய அருளால் எல்லாம் நிகழ்ந்து வருகின்றன என்பது விளங்கும்.
- பொருளற்ற பல சொல்லில் பயனில்லை. மனமடங்கச் செய்யும் ஒரு சொல் உத்தமமானது.
- மேலோர் யார், மற்றவர் யார் என்பதைக் கண்டிருப்பவர் மேலோர் ஆகின்றனர்.
- கடவுளின் தொண்டர்களே சமுதாயத்துக்கு நல்ல தொண்டர்கள் ஆகின்றனர்.
- உன்னுடையவை என்பவற்றையெல்லாம் விட்டு விடு. தெய்வத்தின் மகிமை பிறகு உனக்குச் சொந்தமாய் விடும்.

உலக நாடுகள் வரிசையில் தென் அமெரிக்க நாடுகள்

## பிரென்ஸ் கியான்னா (French Guiana)

2000ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நியூயோர்க்கில் அமைந்திருக்கும் ஐக்கிய நாடுகள் சபையில் கொடிகள் பறக்கும் 188 நாடுகளின் தொகுப்பாகவே இந்த தொகுப்பு அமைந்திருக்கின்றது. இந்த தொடரில் புதிதாக நாடுகள் உருவாகும். அந்த நாடுகளும் கட்டுரையை சிறப்பிக்கும்.

வடஅமெரிக்காவில் முதல் நாடாக கனடா தொடங்கப்பட்டது. பின்பு மெக்சிக்கோ சிறப்பித்தது. அதன் பின் மத்திய அமெரிக்க நாடுகள் 7 வந்தன.

| | |
|---|---|
| | 1. குவாற்றமாலா |
| 2. பெலீஷ் | 3. கொண்டூரஸ் |
| 4. எல்சல்வடோர் | 5. நிக்ரகுவா |
| 6. பனாமா | 7. கொஸ்ரரிக்கா |

3 வடஅமெரிக்க நாடுகள், 7மத்திய அமெரிக்க நாடுகள் 13 தென்அமெரிக்க நாடுகள் வரிசையில் இம்முறை பிரெஞ் கஜானா இத்தொடரை சிறப்பிக்கிறது.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

## உன்னை அறிந்தால்

காலச் சக்கரத்தில் பலர் வருவார் போவார் பூமியிலே. பூமியில் என்றும் மனதில் நிலைத்து நிற்பவர்கள் சிலரே. அவ்வாறு அவாகள மனதில் நிலைத்து நிற்பதற்குரிய காரணங்கள் அவர்கள் செய்த சாதனைகள், சேவைகள், மனிதகுலம் மேம்பட ஆற்றிய தொண்டுகள் மற்றும் பல.

இவர்கள் இவ்வாறு வந்தது, செய்தவை ஒரு தற்செயலாக நடந்த சம்பவம் அல்ல. திட்டமிட்டு முறையாக செயல்பட்டதன் விளைவே அல்லது பலாபலனே அதுவாகும். மூவாயிரத்திற்கு மேற்பட்ட பணக்காரர்களின் வெற்றியை மற்றும் சாதனைகளை பற்றி வினாவிய போது, அவர்களின் வெற்றியின் காரணம் விடாமுயற்ச்சி, தன்னம்பிக்கை. ஒரு செயல் வெற்றிபெற செய்யப்படும் முன்னேற்பாடுகள், அயராத உழைப்பே என அனேகமானவர் ஒத்திருக்கிறார்கள். மின்சாரத்தைக் கண்டுபிடித்த தோமஸ் அல்வா எடிசனை பேட்டி கண்டபோது அவர் கூறியிருந்தார். நான் ஒரே தடவை:பில் இதனைக் கண்டு பிடிக்கவில்லை எனவும் 1000 இற்கு மேற்பட்ட தடவைகள் முயற்சி செய்ததன் பலனாகவே இதனைக் கண்டு பிடித்ததாக கூறினார்.

விடாமுயற்சிக்கு இது உதாரணம். ஒரு செயலை செய்து முடிக்க வேண்டும் என்ற அவாவும் முயற்சியும், தன்னைத்தானே நம்பும் செயலுமேயாகும். **நல்லதையே சிந்திப்போம். நல்லதையே செய்வோம். நாளை நமதே. சிந்திக்கவும்... செயல்படவும், வெற்றி நமதே!!**

-நெற்றிக்கண்ணன்

விளம்பர வினாடி வினா! CTBC RADIO ✡ SATUARYDAY ✡ 12.00 PM



SINGAPORE CELLUAR

$25.00 + Taxes 200min/Month


PAGER $5.95/Month Unlimited

$55.00 +Taxes / Month
7 a.m. - 7 p.m. 400min. இலவசம்
7 p.m. - 7 a.m. கிழமை நாள் இலவசம்
Fri. 7 p.m. - Mon. 7 a.m. இலவசம்
மேலதிக நிமிடம் 20 சதம் மட்டுமே

CANTEL
Bell Mobility

Mobile Message, Call Waiting, Call Display per second billing included.
மேலதிக விபரத்திற்கு சக்தி: (416) 745-2378
HOTLINE: (416) 980-1234

துரித பணமாற்றுச் சேவை



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
☎ (416) 267-8221



சிவாகம கிரியா பீடம்
☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr., Scarborough, Ont.

VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
SCARBOROUGH, ONT. M1B 5P9, CANADA
TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978



# அறிவும் ஆக்கமும் (53)

-விஜே குலத்துங்கம்

இந்த இதழில் எதிர்காலத்தில் மின்கணணி அல்லது கணிப்பொறி என அழைக்கப்படும் Computer எதிர்காலத்தில் எப்படி அமையப்போகின்றது எனப் பார்ப்போம். தற்போதுள்ள கணிப்பின்படி 2019ம் ஆண்டளவில் 1000 டொலர் விலையுள்ள Computer மனிதனின் மூளைக்கு சமமான கணிப்புத்திறன் கொண்டதாக இருக்கும். 2029 ம் ஆண்டளவில் புத்திக்கூர்மைக்குரிய Software உருவாக்கப்பட்டுவிடும் என்றும் அப்போது Computer மனித மூளையைவிட 1000 மடங்கு கூடுதலான வலுக்கொண்டதாக இருக்கும். அந்த காலகட்டத்தில் உணர்ச்சிகள், எண்ணங்கள், ஊகிக்கும் தன்மை மற்றும் இசை, ஓவியம் போன்றவற்றை உருவாக்கும் ஒரு வல்லமையும் இருக்கும்.

எதிர்காலத்தில் Computer chips கள் மூளையின் பல பகுதிகளிலும் செருகப்படக்கூடியதாக இருக்கும். இவற்றை Neural implants என அழைப்பார்கள். காதுகேட்கும் திறனை சீர்படுத்த மூளையின் பகுதியில் வைக்கப்படும் Computer chip ஆனது cochler implant எனப்படும். கண்பார்வைக்கு வைக்கப்படுவது retinal implant எனப்படும். அண்மையில் Emory பல்கலைக்கழகத்தின் ஆராச்சியாளர்கள் செய்த பரிசோதனை ஒன்றில் பாரிசவாதம் வந்த ஒருவரின் மூளையில் வைக்கப்பட்ட chip ஒன்று, அவர் தனது மூளைப்பலத்தினால் computer திரையிலுள்ள cursor ஐ அசைக்கக்கூடியதாக இருந்தது. 2020 ம் ஆண்டளவில் இந்த Neural implant கள், அதாவது மூளையில் பதிக்கப்படும் computer chipகள் புலன்களது உணர்வுகளையும், ஞாபக சக்தி, மற்றும் கற்பனைத்திறன் ஆகியவற்றை மேம்படுத்தக்கூடியதாக இருக்கும்.

இங்கிலாந்திலுள்ள Reading பல்கலைக்கழகத்தின் Cyberne பிரிவைச் சேர்ந்த பேராசிரியர் Kevin Warwick என்பவர் தனது கையில் ஒரு chip வைத்துக் தைத்துள்ளார். இவர் தனது காரியத்திற்கும், பரிசோதனைக் கூடத்திற்கும் சென்றவுடன் விளக்குகள் தானாக எரியும். Computer இயங்க ஆயத்தமாகிவிடும். மற்றும் வெப்பமேற்றி, மற்றும் அவர் உபயோகிக்கும் உபகரணங்களும் இயங்கத் தொடங்கும். இவற்றை இயக்குவதற்கு கட்டளைகள் கையில் பதித்து இருக்கும். Chip ன் மூலம்தான் வழங்கப்படுகின்றது.

இன்னும் 20 - 25 வருடங்களில் பிறக்கும் குழந்தைகளின் கையில் இப்படியான chip வைத்து தைக்கப்படும். பிறப்புச்சான்றிதழில் உள்ள விடயங்கள் இதில் பதியப்படும். பின்பு தேள்வையேற்படும்போது இந்தச் chip இனுள் வெளியில் இருந்தே விடயங்கள் பதியப்படும். உதாரணமாக ஒரு வங்கிக் கணக்கு திறந்தவுடன் கணக்கு இலக்கம், பெயர் போன்றவையெல்லாம் chipல் பதியப்படும். வங்கி அட்டை தேள்வையில்லை. வங்கி இயந்திரத்தில் கையை வைத்தால் கணக்கில் வேண்டிய அலுவல்களை செய்யக்கூடியதாக இருக்கும். அதேபோல் passport எடுக்கும்போது தற்போது போல படம், புத்தகம் என்று தேள்வையில்லை. எல்லாவிடயங்களும் chipல் பதியப்பட்டுவிடும். ஆள்மாறாட்டம் செய்யமுடியாது. ஏற்கனவே அமெரிக்காவின் சில விமான நிலையங்களில், அடிக்கடி வியாபார விடயமாக வெளிநாடு சென்று வருபவர்களுக்கு, அவர்கள் விரல் அடையாளத்துடன் இணைத்து, மின்கணணியில் அவரின் விபரங்கள் இருக்கும். குடிவரவாளரின் பகுதியில் கையை வைத்தால் வெளியே செல்ல அனுமதி கிடைக்கும்.

பேராசிரியர் Warwickன் ஆராய்ச்சிகளின்படி எதிர்காலத்தில் உடலில் chip வைத்து தைப்பதின் மூலம், ஒருவரின் உடலின் நிலையை வெளியில் இருந்தே computer மூலம் அறிந்து கொள்ளலாம். நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு உடலின் சீனிச் சத்தின் அளவையும், இன்சுலின் அளவையும், இரத்தத்தின் cholesterolன் அளவையும், இருதய வியாதி உள்ளவர்களுக்கு இருதயத்துடிப்பு, அதன் வேகம் மற்றும் இருதயத்தின் நிலை போன்றவற்றை, கையில் பதித்துள்ள chip ஆனது வெளியில் இருக்கும். Computer க்கு அறிவிக்கும். நீங்கள் தொலைபேசியினூடாகவோ, internet ஊடாகவோ வைத்தியருடன் தொடர்புகொண்டால், அவர் தூர இருந்தபடியே உங்கள் உடல் நிலையை computer மூலம் அறிந்து கொள்ள முடியும். உடல் நிலை மோசமாகும்போது chip ஆனது தானே 911ஐ அழைத்து அம்புலன்சை வரவழைக்கும்.

தற்போது நாம் Keyboard மூலமாகவோ, mouse மூலமாகவோ அல்லது பேச்சுகளை கிரகிக்கூடிய software மூலமாகவோதான், computerக்கு தரவுகளை கொடுக்கின்றோம். எதிர்காலத்தில் இந்த chipகள் மூலம் நாம் நினைப்பதை computerக்கு கொடுக்கலாம்.

எதிர்காலத்தில் அமைக்கப்படவிருக்கும் வீடுகள் எல்லாம், மின் கணணியால் கட்டுப்படுத்தக்கூடியதான அமைப்பைக் கொண்டிருக்கும். வீட்டிலுள்ள மின்விளக்கும், தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி, மற்றும் மின்சார உபகரணங்கள் எல்லாம் மின்கணணியுடன் இணைக்கப்பட்டிருக்கும். மின்கணணியில் ஒவ்வொரு சாதனமும் இயங்கும் நேரம், விளக்குள் எரிய ஆரம்பிக்கும் நேரம், பின்பு அணையும் நேரம் ஆகியவற்றை தனித்தனியாக மின் கணணியில் program பண்ணலாம். அத்துடன் வெளியில் இருந்தே

தொலைபேசிமூலம் வீட்டில் இருக்கும் மின்கணணியுடன் தொடர்பு கொண்டு, வீட்டில் உள்ள சாதனங்களை இயக்கலாம். நீங்கள் வீட்டை அடையும் போது கோப்பி readyயாக இருக்க வேண்டுமானால், வீட்டிற்கு போகும் வழியிலேயே தொலைபேசிமூலம் வீட்டிலுள்ள coffee machineஐ இயங்கச் செய்யலாம். அதேபோல் பாண் செய்யும் இயந்திரத்தையும் இயங்கச் செய்யலாம். நீங்கள் வீட்டில் இல்லாத போதே, உள்ளே ஆட்கள் இருப்பதுபோல் ஒரு தோற்றத்தை விளக்குகளை அணைத்து இயங்கச்செய்து, மற்றும் தொலைக்காட்சி, வானொலிகளையும் இயக்கலாம

தற்போது Computer chipகள் சாதாரண கடற்கரை மணலில் காணப்படும் silicon என்ற மூலகப் பொருளினால் செய்யப்படுகின்றது. இவை மலிவாக பெருமளவில் கிடைப்பதால் இவை உபயோகப்படுத்தப்படுகின்றது. எதிர்காலத்தில் transistors களின் அளவு அணுக்கள் அளவில் மிகச் சிறியதாக செய்யப்பட்டு ஒரு chip ல் பல பில்லியன் அளவு transistor களை வைக்கக்கூடியதாக அமைக்கப்படும். தற்போது மின்சாரத்தால் கடத்தப்படும் தரவுகள் எதிர்காலத்தில் ஒளிக்கதிர்மூலம் அனுப்பப்படும்போது மிகவும் வேகமாக அனுப்பக்கூடியதாக இருக்கும். ஏற்கனவே தொலை தொடர்பில் செப்பு கம்பிகளுக்கு பதிலாக optical fibre உபயோகிக்கப்பட ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்படியாக ஒளிக்கதிர்கள் மூலம் அனுப்பப்படும் தரவுகள் கொண்ட மின்கணணி optical computer எனப்படும்.

எதிர்காலத்தில் DNAஐ உபயோகித்து computer processor கள் உருவாக்கப்படும் என ஆராச்சியாளர்கள் கூறுகின்றார்கள். Duke பல்கலைக்கழகத்தில் ஏற்கனவே சிறதளவு வெற்றியும் காணப்பட்டுள்ளது. அசுர வேகத்தில் வளர்ந்து செல்லும் computer கள் வருங்காலத்தில் மனிதர்களையே ஆளும் நிலைக்கு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அடுத்த இதழில் மின்கணணியின் இன்னொரு அம்சமான Internetன் எதிர்காலம் பற்றி பார்ப்போம்.

**"அறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் -61 scarfair pathwath, scarborough, ontario, M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது** wijey@


11 வருடங்களாக தமிழர் மத்தியில்

**யோகாஸ்**

☎: (416) 267-0408


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 105

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ | | 3 |
| | ■ | | ■ | | ■ | ■ | |
| | ■ | | ■ | 4 | | | |
| 5 | | | ■ | | ■ | ■ | |
| | ■ | ■ | | 6 | 7 | | 8 |
| ■ | | 9 | ■ | ■ | 10 | 11 | ■ |
| | ■ | 12 | | ■ | | ■ | |
| 13 | | | ■ | ■ | | | 14 |

**இடமிருந்து - வலம்**

1. அப்பளம்
3. நூல் (வல-இட)
4. நோக்கம்
5. சுவாலை அற்ற நெருப்பு
8. கப்பல் தங்குமிடம் (வல - இட)
9. நீரில் வளரும் தாவரம் (வல - இட)
10. வேகம் (வல-இட)
12. நீர் இறைக்க உதவும்
13. ஓவியனின் எழுதுகோல்
14. இது இல்லாத பண்டம் குப்பையிலே என்பர் (வல - இட)

**மேலிருந்து கீழ்**

1. மலை
2. கொட்டகை
3. வியப்பு

6. மணிக்கூடு (கீழ் - மேல்)
7. முற்பகுதி
9. காலணி
11. கப்பம் (கீழ் - மேல்)
13. புழுதி (கீழ் - மேல்)
14. பண்டங்கள் வைக்கும் தூக்கு (கீழ்-மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் MARCH 27, 2000க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அ | ங் | கீ | க | ரி | ■ | டு | நா |
| ங் | ■ | ழ் | ■ | ம | ■ | வி | ழி |
| கா | ■ | ப் | ■ | கு | த் | த | கை |
| டி | ட் | ப | ■ | ■ | ■ | ■ | ■ |
| ■ | ■ | டி | ■ | ம் | ட | ட் | நா |
| கு | ■ | வு | ணி | ப | ■ | ■ | ண |
| டு | மா | ■ | ■ | ம் | ■ | நா | ம் |
| க | ன் | னி | யா | கு | ம | ரி | ■ |

**#104இல் வெற்றி பெற்றோர்**

1)S. Vashugee, Toronto, Ont.
2.N. Ahila, Mississauga Ont.


*இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள் உடன் ஆட்டிறைச்சி, கோழி, மாடு, மீன், கணவாய் மற்றும் சகல விதமான உணவுப் பொருட்களுக்கும் நாடுங்கள்*



Banana Leaf

**BANANA LEAF**
**Take-out & Catering**

*Everyday Special*
ஆடு, மாடு, புரியாணி — Free வட்டிலப்பம் — $5.50

**தினமும் ஸ்பெஷல்**

| | | |
|---|---|---|
| செவ்வாய், வெள்ளி | மரக்கறி சாப்பாடு 10 வகை கறியுடன் மத்தராஸ் தாளி (FREE POTATOES PORI) | $4.99 |
| புதன் | புட்டு, முட்டைப்பொரியல், இறால் குழம்பு சம்பல், பருப்பு | $3.99 |
| வியாழன் | 3ரொட்டி, சிக்கன் பாலுண்டி கட்டைச்சம்பல் | $3.99 |
| சனி, ஞாயிறு | மீன் சாப்பாடு, மரக்கறி வகைகளுடன் | $5.50 |
| ஞாயிறு | LampRice | $5.50 |
| திங்கள் | மூடப்பட்டிருக்கும். | |

431 Nugget Avenue, Unit 10, Scarborough, Ont. (Markham & Nugget)
Tel: (416) 609-9247 Pager (416) 600-1030, (416) 704-8208 (24hrs.)

# APPLEMORE AUTOMOTIVE


உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing




- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility




**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple



## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING


>Railing >Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5


## வாகனச் செய்திகள் உங்களுக்குத் தெரியுமா?



1. வாகனங்கள் வாங்குவதற்கான கடன்களின் வட்டிவீதம் கடந்த சில மாதங்களாக கூடிச் செல்கிறது.
2. Honda Civic இரண்டாவது வருடமாகவும் கனடாவின் No1. விற்பனை வாகனமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.
3. Honda Odyssey Van தான் 1999, 2000 ஆண்டுகளின் முதல்தரமான பாதுகாப்பான Passengers van ஆகும்.
4. உங்கள் வாகனத்தை அடிக்கடி கழுவுவதன் மூலம் (பனிக்காலத்தில்) துருப்பிடிப்பதை தவிர்க்க முடியும்.
5. உங்கள் புது வாகனத்திற்கான Radio, Spoiler, Tint போன்ற எல்லாவற்றையும் வெளியில் வாங்குவதன் மூலம் பெருமளவில் சேமிக்க முடியும்.
6. பலரும் புதிய வாகனம் வாங்கும் போது மலிவாக வாங்குவதைப்பற்றித்தான் சிந்திக்கின்றார்கள். ஆனால் Dealers உங்களிடம் சம்பாதிப்பது உங்கள் வாகனத்தை அவர்களிடம் Service க்கு எடுத்துச் செல்லும் போது தான்
7. நீங்கள் Snow இல் புதையுண்டு விட்டால் உங்கள் வாகனத்தை Reverse Gear இல் மாற்றி மெதுவாக Gas ஐ கொடுப்பதன் மூலம் வெளியில் எடுப்பது இலகுவாகும்.
8. நீங்கள் உங்கள் வாகனங்களுக்கு 5W - 30 Oil ஐ குளிர்காலங்களில் பாவிப்பதனால் இலகுவாக Start பண்ண முடியும்.

*மேலதிக விபரங்களுக்கு- **சோதீஸ்** Cell (416) 704 -1179*


## நியூ மிலேனியத்தில் ஸ்காபரோவில் 9 வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க
வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

**Also Air Conditioning Service & Repair**


**NTE AUTO INC.**
**New Trade Engineering**

**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

**Contact: Sivabalan** **சிவபாலன்**

**Tel: (416) 750 - 1573**

**151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.**



In New Millennium We are entering 9th year service in Scarborough


### *COUNTRIES WITH THE GREATEST AREA OF INLAND WATER*

| | Country | Percentage of total area | water area sq km | water area sq miles |
|---|---|---|---|---|
| 1 | Canada | 7.60 | 755,180 | 291,597 |
| 2 | India | 9.56 | 314,400 | 121,391 |
| 3 | China | 2.82 | 270,550 | 104,460 |
| 4 | US | 2.20 | 206,010 | 79,541 |
| 5 | Ethiopia | 9.89 | 120,900 | 46,680 |
| 6 | Colombia | 8.80 | 100,210 | 38,691 |
| 7 | Indonesia | 4.88 | 93,000 | 35,908 |
| 8 | Russia | 0.47 | 79,400 | 30,657 |
| 9 | Australia | 0.90 | 68,920 | 26,610 |
| 10 | Tanzania | 6.25 | 59,050 | 22,799 |

# ஆரோக்கிய வாழ்வு (53)



N. செல்வசோதி

## அல்சர் குணமாக யோக சிகிச்சை

அல்சர் நோய்க்கு மூலிகை மருத்துவம்தான் முதன்மை வாய்ந்தது. அதற்குத்தகுந்தபடி மூலிகைகளை இந்த நாட்டில் (கனடா) எடுக்க இயலாது. ஆங்கிலேய மருத்துவத்தைக்கொண்டு முழுமையாகக் குணமடைந்த ஒருவரையும் நாம் பார்த்ததில்லை. எனவே இந்த அல்சர் வியாதிக்கு யோகசிகிச்சை ஒன்றுதான் இலகுவான எளிய வைத்தியமுறையாகும்.

சிறுகற்கள், இரும்புத்தூள், விசக்கிருமிகள், அமிலங்கள் போன்றவைகளால் நம் உடலில் உள் உறுப்புகளோ அல்லது வெளி உறுப்புகளோ தாக்கப்பட்டு பழுதடைந்து வீக்கம், கட்டி, புண் இப்படி ஏதாவது ஏற்பட்டு வலியும் எரிச்சலும் தரும் நிலையைத்தான் "அல்சர்" என்கிறோம்.

நமது உணவுப் பழக்க வழக்கம் இந்த நோய்க்கு முக்கிய காரணமாகும். காரம், புளிப்பு, உப்பு போன்றவைகளை அதிகம் சேர்ப்பதாலும் நோய் எதிர்ப்புச் சக்தி உடலில் குறைவதாலும், வயிற்றில் சுரப்புநீர் கட்டுப்பாடின்றி அதிக அளவில் சுரப்பதாலும் உண்டாகிறது. அவ்வப்போது சில இரசாயன மருந்து வகைகளை உட்கொள்வதால் அந்த நேரத்தில் மட்டும் சிறிது குணம் ஏற்படும். ஆனால் இவைகள் தரும் பக்க பின் விளைவுகளினால் உடலின் உட்புறத்திலுள்ள சதைப்பகுதிகள் பாதிக்கப்படும். குடிப்பழக்கத்தினாலும் குடலில் புண்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

### அல்சர் நோயை எப்படி அறிவது

வயிறு, நெஞ்சு போன்ற பகுதிகளில் அடிக்கடி விட்டுவிட்டு வலியிருக்கும். பசி நன்கு எடுத்து உண்ண விரும்பினாலும் சரியாக ருசித்து உண்ண முடியாது. சாப்பிட்ட உடனேயே சற்று நேரம் கழித்தோ வயிற்றில் வலி, வாந்திக்குணம், புளிஏப்பம் வருதல், எரிச்சல், வாயில் அடிக்கடி துர்நாற்றம் வருதல், அடிக்கடி காற்று பிரிதல் என்பன அல்சர் நோயின் அறிகுறிகளே. அத்துடன் இரப்பையிலும் அல்சர் ஏற்படுவதுண்டு. சாப்பிட்டவுடன் வயிற்றில் வலி அதிகமாகும். வாந்தி எடுத்தால்தான் வலி குறையும். இந்த நிலை உள்ளவர்களுக்கு நன்கு பசி எடுக்கும். ஆனால் உண்பதற்குப் பயந்து உடல் மெலிகின்றனர்.

### சிகிச்சை முறை

நேரம் தவறாது உணவு உட்கொள்வதே "அல்சர்" வராமல் தடுக்க சிறந்த வழி. பழங்கள் பழச்சாறு போன்றவைகளையாவது உண்டு பசியைத்தணிக்க வேண்டும். எந்த உணவையும் பற்களால் நன்கு மென்று உமிழ்நீருடன் கலக்கும்படி செய்து விழுங்கவேண்டும். அவசரஅவசரமாக ஒன்றிரண்டைக் கடித்து அப்படியே விழுங்குவது கூடாது. திரவ உணவானாலும் அதனைக் கொஞ்சம் கொஞ்சமாக நாக்கினால் கலக்கிக் குடிக்க வேண்டும். நெல்லிக்காயும் தேனும் இந்த வகைநோய்க்கு கைகண்ட மருந்து. உடலுக்குக் குளிர்ச்சியூட்டக்கூடிய காய்கறிகளை உணவில் சேர்த்து வந்தால் இந்த நோய் ஒரு போதும் வராது தடுக்கலாம்.

| ஆசனங்கள் | முறைகள் | நிறுத்தும்காலம் |
|---|---|---|
| 1. சலபாசனம் | 3 | 04 முதல் 08 வினாடி |
| 2. தனுராசனம் | 4 | 10 முதல் 25 வினாடி |
| 3. பட்சிமொத்தாசனம் | 4 | 05 முதல் 15 வினாடி |
| 4. ஹலாசனம் | 5 | 03 முதல் 15 வினாடி |
| 5. மயூராசனம் | 3 | 04 முதல் 10 வினாடி |
| 6. சர்வாங்காசனம் | 2 | 02 முதல் 04 நிமிடம் |
| 7. சிரசாசனம் | 1 | 02 முதல் 06 நிமிடம் |
| 8. சவாசனம் | ! | 05 முதல் 10 நிமிடம் |
| 9. உட்டியானா | 4 | 04 முதல் 10 வினாடி |
| 10.நாடிசுத்தி | 1 | 10 நிமிடம் |

மேற்குறிப்பிட்ட அல்சர் நோயானது பூரணமாகக் குணமாகும் வரை இந்த ஆசனப் பயிற்சிகளை நிறுத்தாது செய்து வருதல் வேண்டும்.

-நன்றி யோகக் சிகிச்சை


**யோகாசன வகுப்பு**

யோகாசனப் பயிற்சிகள் மூலம் உங்கள் உடல் நலத்தைப் பேணுங்கள். யோகாசனப் பயிற்சி வகுப்புக்கு தொடர்புகொள்ள

இடம்: Woburn Collegiat e (Markham /Ellesmere)

நேரம்: 7:30 am - 8:30am தொடர்புகளிற்கு: - சத்தி: 291-5853



**Neelam SILK**

**நீலம் சில்க்**

*2000ஆம் ஆண்டின் புதிய புடவைத் தெரிவுகளை நம்மவர்களுக்கு அறியத்தருகிறார்கள் 'நீலம் சில்க்'*

**உயர்ரகப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்**

- முகூர்த்தப்பட்டுப் புடவைகள்
- பாரம்பரிய பட்டுப் புடவைகள்
- Thread Work பட்டுப்புடவைகள்
- ரிசு சேலைகள்
- காஞ்சி 2000 ரிசு சேலைகள்
- Emboss Tissue சேலைகள்,
- Cut Work சேலைகள்
- அபூர்வா 2000 Cut Work



**புதிய வெளியீடுகள்**

மைசூர் சில்க் சேலைகள், சோனா மீனா (Sona Meena) புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள்

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

**'நீலம் சில்க்'**

**1453 GERRARD STREET EAST (Indian Bazzar)**


CALL: (416) 778- 7455 FAX: (416) 778-8484


### தீப்பெட்டிக்குள் அடங்கும் சில்க் சேலை


பழங்கால இந்தியாவில் தீப்பெட்டிகுள் அடங்கும் அளவுக்கு மஸ்லின் சேலை தயாரிக்கப்பட்டதாக கேள்விப்பட்டிருக்கிறோம். அதை இப்போது நிரூபித்துக் காட்டியிருக்கிறார் நாராயணப்பா என்பவர். இந்தியாவின் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த இவர் தலைசிறந்த நெசவாளர் ஆவார். இவர் மனைவி கமலம்மாளுடன சேர்ந்து 6.5 மீட்டர் நீளத்தில் சில்க் சேலையை உருவாக்கி இருக்கிறார். 1 மீட்டர் அகலமுள்ள இந்த சேலையின் மொத்த எடையே 30 கிராம் தான். இந்த சேலையை தீப்பெட்டிக்குள் அடங்கும்.


**V.N.T. AUTO COLLISION**

- * Complete Collision Service
- *Unibody Frame Straightening
- * Under Coating & Rust Proofing
- * All Mechanical & Electrical Repairs
- * உட்புற வெளிப்புற பராமரிப்பு
- *Tuneup & Brakes
- * Oil Change & Lubrication
- *Insurance Claims
- *Free Estimates



**200 FULLER ROAD**
**UNIT #4A**
**PICKERING, ONT.**
**TEL: (905) 426-5136**






கனடாவில் முதன்முதலில் தலைவாழை விருந்து படைத்தவர்கள்

**கிராமத்து விருந்து**




**RESTAURANT, CATERING, TAKE OUT** *L.L.B.O.*

**603 Kennedy Road,**
**Scarborough, Ont.**
**☎: (416) 266-4240**

***TAKEOUT ONLY***

சிக்கன் அல்லது பீவ்(**Beef**) முஸ்லிம் ஸ்ரைல் பிரியாணி, தலை வாழையிலையில் ஆக **$5.99** மட்டுமே



**மட்டக்களப்புக்கு பணம் அனுப்ப**

மட்டக்களப்புக்கு 24 மணி நேரத்தில் பணம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும். புளியந்தீவு, ஏறாவூர், செங்கலடி, வாழைச்சேனை, கல்முனை மற்றும் மட்டக்களப்பு டவுண் அழைக்கவும்

ஜோசப் **(416) 266-4240**

# ஒரு சாதாரண மனிதரின் சிந்தனையில்.....



தந்தை யார் (?)

தாயிற்சிறந்த கோயிலும் இல்லை என்று ஆரம்பித்து எத்தனையோ வகைகளில் தாயின் மேன்மை பற்றி, தாயின் அன்பு, பாசம், கருணை, பொறுமை என்று பேசப்பட்டு மதிக்கப்பட்டு வருகிறார்கள். தாய்மைக்கு கிடைக்கும் மதிப்பும் அன்பும் தந்தையர்க்கு கிடைப்பது இல்லை. யார் இந்தத் தந்தை?



கருவில் உருவாகி பத்து மாதம் தாயின் உடலுக்குள் வளர்ந்த போதும், நாம் உருவாவதற்கு உயிர் கொடுத்தவன் தந்தை என்பதை பொதுவாக யாருமே எண்ணிப் பார்ப்பதில்லை. எமக்கு உயிர் கொடுத்தவன் தந்தை என்ற முறையில் சிந்தித்தோமேயானால் தாயிற்கு ஈடான அன்பும் மதிப்பும் தந்தைக்கும் கிடைத்து இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. தாயைப்பற்றி எண்ணும் போது அன்பும் பாசமும் எமக்கு நினைவுக்கு வருகின்றது. ஆனால் தந்தை பற்றி எண்ணும் போது கண்டிப்பு என்பது மட்டுமே எமது கண்முன்னே நிற்கின்றது. நாம் சிறுவயதில் செய்யும் தவறுகளை திருத்துவது முதலாக பொறுப்பு உணர்ச்சியுடன் நடந்து நல்ல கல்வி பயின்று வாழ்க்கையில் ஒரு நல்ல மனிதனாக வாழ்வதற்கு தந்தை பொதுவாக கண்டிப்பு என்ற வழியையே கையாளுகின்றார். அந்தக் கண்டிப்பு காரணமாக தந்தையை பற்றிய ஒரு வித பய உணர்வே எம்முடன் நிலைத்து நிற்கின்றது. அந்தப் பய உணர்வு தந்தையை பற்றிய நல்ல எண்ணத்தை கண்டிப்பினால் உருவான பயம் காரணமாக நல்ல பழக்கங்களை பழகி, நல்ல முறையில் கல்வி பயின்று வாழ்க்கையில் எத்தனையோ பேர் வெற்றி கண்டு இருந்த போதும் அந்தக் கண்டிப்புத் தான் எம்மை நல்வழிப்படுத்தியது என்பதை மறந்து வருகின்றோம். தந்தை கண்டிக்கும் போது இடையில் புகுந்து எம்மைக் காப்பாற்றிய தாயின் அன்பு தான் எமது வாழ்க்கையை பயன்படுத்தியது என்பது போல நடந்து கொள்கின்றோம்.

எம்மையும் எமது தாயாரையும் கூடப்பிறந்த சகோதரங்களையும் இந்த உலகில் உணவு, உடை, கொடுத்து வாழ வைப்பது முதலாக நல்ல கல்வி பயிலவும், சகோதரிகளுக்கு திருமணம் செய்து கொடுக்கும் போது தேவைப்படும் சீதனங்களுக்கும் வேண்டிய பணத்தை உழைப்பதற்கும் அவன் மாடாக உழைத்து ஓடாகத் தேய்ந்து போகின்றான் என்பதை நாம் உணர்வதில்லை. அது அவருடைய கடமை என்பது போல எண்ணுகின்றோம் நடக்கின்றோம். கடினமாக தனது உடலை தேய்த்து உழைப்பதுடன் தனது உணர்ச்சிகளையும் தனக்குள் அடக்கிக் கொள்கின்றான் தந்தை.

நாமும் வளர்ந்து தந்தை ஸ்தானத்தை அடையும் போது தான் எமது தந்தையின் முக்கியத்துவம் புரிகின்றது. அவரை எண்ணி பெருமைப்பட்டு கண்ணீர் விடுகின்றோம். கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் செய்து என்ன பயன்.

பொறுப்புணர்ச்சி என்பதே என்ன வென்று தெரியாத, தான்தோன்றித் தனமான தந்தையை கொண்டவர்களுக்கு மேற்சொன்ன விடயங்கள் புதுமையாகத் தோன்றலாம். ஆனால் என்ன செய்வது அது அவர்களுடைய அனுபவங்கள். எனது எண்ணத்தில் தோன்றிய தந்தை இந்த உலகத்தில் பெரும்பான்மையானவர்களே என்பதை யாராலும் மறுக்க முடியாததாகும்.

*-சிந்தனை தொடரும்....*


**TAMIL INSURANCE CLAIMS CONSULTANT**

தமிழில் இலவச ஆலோசனை

**வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?**

*தகுந்த ஆலோசனை *சட்ட உரிமை *உரிய நஷ்ட ஈடு
*விபத்துக்குள்ளாலியவர் சம்பள இழப்பீடு
*மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும் அறிவுரைகளும் தமிழிலும்
ஆங்கிலத்திலும் சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள 12 வருடகால அனுபவமுள்ளவர்

**ரவி நடராஜா**

TEl:(416) 245-6555 Fax: (416) 245 7766
2095 Weston Rd. #201 (South of HWY 401) Toronto Ont. M9N 1X7



**YARL WINDOW COVERING**

**1530 WARDEN AVENUE**

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இப்பொழுதே தொடர்புகொள்ளுங்கள்

**CUSTOM MADE..**
* VENETIAN BLINDS
* VERTICAL BLINDS
* ROLLER BLINDS
* PLEATED SHADES
* DRAPERIES




*இருபத்தாறு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் திரைச் சேலைக் தைத்தக் கொடுக்கப்படும்*

தொடர்புகளுக்கு: என். செல்வம்
(416) 383-0205
(416) 650-0377

FREE ESTIMATE





**பூட்டு? சாவி?**

**KEERTH LOGSMITH**


**வீடு-வியாபாரம்-தொழிலகம்**

*வீட்டு திறப்புகள் தொலைந்து விட்டதா? மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது சகலவித திறப்பு சம்பந்தமான பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில் வைத்திருக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்*



(416) 439-3709
Pager: 375-7330





**ELECTRICAL REPAIRS**

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்கள் வீடியோக்களை குறைந்த செலவிலும்,சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்

முருகதாஸ் - ☎ 261-6883



**பூச்சிகளை அழிக்கவே முடியாதா?**

**PEST CONTROL**

* எலிகள் * கரப்பான் பூச்சிகள்
* மூட்டைப்பூச்சிகள் * எறும்புகள்

போன்றவற்றை முற்றாக அழித்து நிவாரணம் பெற இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

**(416) 410-2786**

*7 நாட்களும் அழைக்கலாம்*

* 100% முற்றாக அழிக்க முடியும் என்று எழுத்து மூலம் தரப்படும்
***ஒருதடவை அணுகுங்கள் உண்மை புரியும்***

* **WE ARE QUALIFIED, PROFESSIONAL, INSURED AND BONDED.**

* **NO NEED TO LEAVE TO HOME OR REMOVE DISHES DURING TREATMENT.**

# விளையாட்டுத் தகவல்கள் (49)

-எஸ். கணேஸ்-



## பாகிஸ்தானை நிலை தடுமாற வைக்கும் தமிழ் வீரன் முத்தையா முரளீதரன்

### கிரிக்கெட்

சென்ற வாரம் இலங்கை அணி பாகிஸ்தான் அணியை மூன்று ஒருநாள் 50 ஓவர் போட்டிகளில், மூன்றிலும் வென்று பாகிஸ்தானை Clean sweep! செய்தது பற்றி பார்த்தோம். தற்போது இலங்கை அணி பாகிஸ்தான் அணியை எதிர்த்து மூன்று **Test** போட்டிகளில் மோதுகின்றது. இப்போட்டிகளில் இலங்கை அணியின் வெற்றிகளுக்கு வழி அமைப்பவர்களின் வரிசையில் தமிழ் வீரன் முரளிதரன் முன்னனியில் திகழ்கின்றார். March 9ம் திகதி நடந்து முடிந்த இரண்டாவது test ஆட்டத்தில் இரண்டு இனிங்ஸ்லும் முறையே 4 விக்கெட்டுகள், 6 விக்கெட்டுகள் என கைப்பற்றி இரண்டாவது ஆட்டத்தில் மொத்தமாக 10 விக்கெட்டுகளை சரித்து (man of the match) ஆட்டத்தின் நாயகன் என்ற விருதையும் பெற்றுக் கொண்டார்.

உலகத்தில் magic bowler என வருணிக்கப்படும் முத்தையா முரளிதரன் உலகத்தில் உள்ள சகல அணிகளுக்கும் சிம்ம சொர்ப்பனமாக தற்போது திகழ்ந்து வருகின்றார். சில ஆண்டுகளுக்க முன்பு இவரின் பந்து வீச்சை எதிர்நோக்க பயந்து அவுஸ்ரேலியா அணி




நடுவர்களின் மூலம் பல கதைகளை கட்டிவிட்டது. இதன் மூலம் இவரின் பந்து வீச்சு செல்லுபடியானது என்பதை நிருபிக்க பல விஞ்ஞான பரிசோதனைகள் இவ் தமிழ் வீரனின் உடம்பில் மேற்கொள்ளப்பட்டது. இவற்றை எல்லாம் வெற்றிகரமாக முறியடித்து இவ் வீரனின் பந்துவீச்சில் எவ்வித பிழையும் இல்லை என்பதனை இறுதியாக சர்வதேச கிரிக்கட்சபை அறிவித்தது. இதைத்தொடர்ந்து இங்கிலாந்து அணியான**Lancashire** மூன்றுவருட ஒப்பந்தம் செய்து கொண்டது. தற்போது இலங்கை அணியின் உயிர்நாடியாக திகழ்ந்து வருகின்றார்.

1972ம் ஆண்டு ஏப்பிரல் 17ம் திகதி கண்டியில் பிறந்த முரளிதரன் Right Arm Off Break பந்து வீசும் styleயை கொண்டவர். உலகத்தில் spinnerஸ் வரிசையில் அதிகூடிய விக்கெட்டுகளை எடுத்து தற்போது இரண்டாம் இடத்தில் உள்ளார். 1997ம் ஆண்டு இங்கிலாந்து நாட்டுடன் நடைபெற்ற test போட்டியில் ஒரு ஆட்டத்தில் இரண்டு இனிங்ஸ்லும் 16 விக்கட்டுகளை கைப்பற்றி சாதனையை ஏற்படுத்தினார். தற்போது இலங்கை அளிக்கும் Tamil Union அணிக்கும், இங்கிலாந்து அணியான Lancashire அணிக்கும் விளையாடி வருகின்றார்.

இதுவரை பந்து வீச்சில் test ஆட்டங்களில் 245 விக்கட்டுகளையும், ஒருநாள் 50 ஓவர் ஆட்டங்களில் 185 விக்கெட்டுகளையும் கைப்பற்றி உள்ளார். Test ஆட்டங்களில் 18 தடவைகள் 5 விக்கெட்டுகளையும், 3 தடவைகள் 10 விக்கெட்டுகளையும் கைப்பற்றி உள்ளார். Test ஆட்டத்தில் இவரின் அதிகூடிய பெறுபேறு ஒரு இனிங்ஸ் இல் மட்டும் 65 ஓட்டங்களை கொடுத்து 9 விக்கெட்டுகளையும், ஒரு நாள் ஆட்டங்களில் 23 ஓட்டங்களை கொடுத்து 6 விக்கெட்டுக்களையும் கைப்பற்றி உள்ளார். அதுமட்டுமல்லாமல் fielding இல் மிகவும் சிறந்தவர் என் வருணிக்கப்படும் இவர் இதுவரை இலங்கை அணிக்காக 83 catchகளை பிடித்துள்ளார். அத்துடன் இங்கிலாந்து அணியான Lancashtre அணிசார்பில் சென்ற வருடம் 66 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்துள்ளார். சென்ற வருடம் Lancashireக்கும் Eesexக்கும் நடைபெற்ற போட்டியில் 50 ஓவர் ஆட்டத்தில் 10 விக்கெட்டுகளையும் ஒரேயடியாக கைப்பற்றி சாதனை நிகழ்த்தியுள்ளார். இத் தமிழ் மகன் உலகில் மேலும் புகழ் பரப்ப நாம் எல்லாரும் வாழ்த்துவோமாக!!!

இலங்கை கிரிக்கெட் அணி தற்போது பாகிஸ்தானை எதிர்த்து பங்குபற்றி இரண்டு test ஆட்டத்திலும் வெற்றி பெற்றுள்ளது. World cup ஆட்டங்களின் பின்பு Dav whatmore பயிர்ச்சியாளராக மீண்டும் ஒப்பந்தம் செய்த பின்பு Sept - 1999 இல் இருந்து ஒரு test போட்டியில் அவுஸ்திரேலியா அணியையும், அடுத்து ஒரு test போட்டியில் சிம்பாவே அணியையும் அடுத்து இரண்டு test போட்டிகளில் பாகிஸ்தான் அணியையும் வெற்றி கொண்டுள்ளது. கடைசியாக இலங்கை அணி விளையாடி 8 ஆட்டங்களில் எவற்றிலும் தோல்வியை இதுவரை தழுவவில்லை (undefeated). நான்கு ஆட்டங்களில் வெற்றியும் நான்கு ஆட்டங்களில் வெற்றி தோல்வி இன்றியும் முடிந்துள்ளன. இதுவரை காலமும் இலங்கை அணி ஒரு நாள் ஆட்டங்களிலேயே பாண்டித்தியம் பெற்றவர்கள் என்ற உலக கணிப்பும் தற்போது இலங்கை அணி சரித்திரத்தில் மாற்றி எழுதியுள்ளது.

**1st Test - (Feb 26, 27, 28, 29, March 1, 2000)**

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 182 ஓட்டங்களை வென்று சகல விக்கெட்டுகளையும் முதல் இனிங்ஸ்இல் இழந்து பாகிஸ்தான் சார்பாக Inzaman Ulhag 44, Youhana 32, Saeed Anwar 23 ஓட்டங்களை பெற்றனர். புந்து வீச்சியில் இலங்கை அணி சார்பாக முரளிதரன் 4 விக்கட்டுகளும், விக்கிரமசிங்க 4, வாஸ் 2 விக்கட்டுகளும் கைப்பெற்றனர். அடுத்து துடுப்பாடிய இலங்கை அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 353 ஓட்டங்களை பெற்றது.·. இதில் அரவிந்த டி சில்வா 112, ஜெயவர்த்தனா 42, ரணதுங்கா 49, ஆனோல்ட் 29 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் Waqar Younis 4 விக்கெட்டுகளை கைப்பெற்றார். இரண்டாவது இனிங்ஸ் இல் பாகிஸ்தான் அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 390 ஓட்டங்களை பெற்றது. இதில் Younis Khan 107, Saeed Anwar 84, Wasim Akkam 79 ஓட்டங்களை பெற்றனர்.

அடுத்து துடுப்பாடிய இலங்கை அணி 220 ஓட்டங்களை பெறவேண்டிய நிலையில் களம் இறங்கியது. ஒருநிலையில் 8 விக்கெட்டுகளை இழந்து 177 ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில் இருந்த இலங்கை அணி கையில் காயம் பட்டபோதிலும் சளைக்காமல் ஆடி இலங்கை அணியை வெற்றிக்கு இட்டு சென்றார் முன்னைநாள் கப்டன் அர்ச்சுனா ரணதுங்கா. இதில் ஜெயசூரியா 56, அரவிந்த 26, ஜெயவர்த்தனா 35, கழுவித்திரன 36, ரணதுங்கா 29 ஓட்டங்களை பெற்று 8 விக்கெட் நஸ்டத்திற்கு 220 ஓட்டங்களை பெற்று இலங்கை அணி இரண்டு விக்கெட்டுகளால் வெற்றி ஈட்டியது. அரவிந்த டி சில்வா ஆட்ட நாயகனாக விருது பெற்றார். பாகிஸ்தானின் இரண்டாவது இனிங்ஸ் இல் பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக முரளிதரன் 4 விக்கெட்டுகளும், வாஸ் 3, சோசா 3 விக்கெட்டுகளை கைப்பெற்றினர்.

2nd test (March 5, 6, 7, 8, 9, 2000)

முதலில் துடுப்பாடிய இலங்கை அணி 268 ஓட்டங்கள் பெற்றன. இதில் அத்தபத்து 75, ஜெயசூரியா 30, அரவிந் 33, ஜெயவர்த்தனா 36, முரளிதரன் 22 ஓட்டங்கள் எடுத்தனர். அடுத்து ஆடிய பாகிஸ்தான் அணி 199 ஓட்டங்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதில் முரளிதரன் 4, வாஸ் 2, விக்கிரமசிங்க 2, விக்கெட்டுகளை கைப்பெற்றினர். இரண்டாவது இனிங்ஸ் இல் இலங்கை அணி 224 ஓட்டங்களை எடுத்தது. இதில் ஆனோல்ட் 99, அரவிந்த 31, அத்தபத்து 29 ஓட்டங்களை எடுத்தனர். புந்து வீச்சில் பாகிஸ்தான் சார்பாக Waqar younis 3, Arshad Khan 3 விக்கெட்டுகளை கைப்பற்றினர். அடுத்து களம் இறங்கிய பாகிஸ்தான் அணி 294 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற target யை பெற்றிருந்தது. ஆனால் 236 ஓட்டங்களை பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்தது. பந்துவீச்சில் முரளிதரன் 6 விக்கெட்டுகளையும், வாஸ் 3 விக்கெட்டுகளையும் கைப்பெற்றார்கள். இலங்கை அணி இரண்டாவது testஇல் 57 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இந்த test ஆட்டத்தில் மொத்தமாக 10 விக்கெட்டுகளை கைப்பெற்றிய முரளிக்கு Man of the match விருது வழங்கப்பட்டது. "வாழ்க முரளிதரன், வளர்க தமிழன் புகழ் தரணி எங்கும்".




ஞானம்ஸ் ஸ்ரூடியோ

Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12

Professional Photographer - கதிர்

☎: (416) 750-8118

2381 EGLINTON AV. E.

KENNEDY/ EGLINTON, SCARBOROUGH

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- சாதகக் குறிப்பு கணித்தல்
- பலன் பாத்தல்
- எண் சோதிடப்படி ஆலோசனை கூறுதல்




☎: 299-8361

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

—தொகுப்பு - பரம் & சண்

### 1974

1. அன்பைத்தேடி* 2. அன்புத் தங்கை
3. அப்பா அம்மா 4. அக்கரைப்பச்சை
5. அத்தையா மாமியா
6. அவள் ஒரு தொடர்கதை
7. அவளுக்கு நிகர் அவளே 8. இதயம் பார்க்கிறது
9. உரிமைக்குரல்* 10. உன்னைத்தான் தம்பி
11.உங்கள் விருப்பம் 12. எங்கம்மா சபதம்
13.என் மகன்* 14. எங்கள் குலதெய்வம்
15. ஒரே சாட்சி
16. ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு
17. கடவுள் மாமா 18. கலியுகக் கண்ணன்
19. கல்யாணமாம் கல்யாணம்
20. கண்மணி ராஜா 21. குமாஸ்தாவின் மகள்
22. கைநிறைய காசு 23. சமர்பணம்
24. சமையல்காரன் 25. சிரித்துவாழவேண்டும்*
26. சிசுபாலன் 27.சிவகாமியின் செல்வன்*
28. சுவாதி நட்சத்திரம்
29. சொர்க்கத்தில் திருமணம்*
30. டாக்டரம்மா 31. டைகர் தாத்தாச்சாரி
32. தங்கப்பதக்கம்* 33. தங்க வளையல்
34. தாகம் 35. தாய்
36. தாய் பிறந்தாள் 37. தாய் பாசம்
38. திக்கற்ற பார்வதி 39. திருடி
40. திருமாங்கல்யம்* 41.தீர்க்கசுமங்கலி
42. தேவி ஸ்ரீ கருமாரி அம்மன்*
43.நான் அவனில்லை 44. நேற்று இன்று நாளை*
45. பந்தாட்டம் 46. பருவகாலம்
47. பத்துமாத பந்தம்* 48. பணத்துக்காக
49. பாதபூஜை 50. பிள்ளைசெல்வம்
51. பிராயச்சித்தம் 52. புதிய மனிதன்
53. பெண் ஒன்று கண்டேன் 54. மகளுக்காக
55. மலைநாட்டு மங்கை* 56. மாணிக்க தொட்டில்
57. முருகன் காட்டியவழி 58. ராஜநாகம் *
60. வாணி ராணி*
61.வெள்ளிக்கிழமை விரதம்* 62. வைரம்


1931ஆம் ஆண்டு ஆரம்பித்த சினிமா குதிரையோட்டம் இவ்வருடத்துடன் 43 வருடங்கள் கடந்து விட்டன. இவ்வருடம 1974ஆம் ஆண்டு மொத்தம் 62 சினிமாப்படங்கள் வெளிவந்தன. எம். ஜிஆரின் மூன்று படங்களாக நேற்று இன்று நாளை, உரிமைக்குரல், சிரித்து வாழவேண்டும் ஆகிய மூன்று படங்கள் வெளிவந்தன. சிவாஜி நடித்த சிவகாமியின் செல்வன், தாய், வாணி ராணி, தங்கப்பதக்கம், என் மகன், அன்பைத் தேடி ஆகிய 6 படங்கள் வெளிவந்தன. கே. பாலச்சந்தர் திரைக்கதை, வசனம், டைரக்சனில் வெளிவந்த அவள் ஒரு தொடர் கதை, நான் அவனில்லை ஆகிய இருபடங்கள் வெளிவந்தன.

'நான் அவனில்லை' ஜெமினி கணேசன், பல வேடங்களில நடித்து வெளிவந்த படங்களும் மற்றும் சுஜாதா, ஜெய்கணேஷ் , படாபட் ஜெயலட்சுமி முதன முதலாக தோன்றிய அவள் ஒரு தொடர்கதையும் வெளிவந்த ஆண்டு

மகேந்தரனின் கதை, வசனத்திலான தங்கப் பதக்கம், சிவாஜிக்கு இந்த ஆண்டிற்குரிய சிறந்த நடிகர் என்ற பட்டத்தை பெற்றுக் கொடுத்தது. தீர்க்க சுமக்கலி என்ற படத்தில் சிறந்த நடிகைக்கான பரிசும் கிடைத்தது.

குறிப்பு: தங்கப்பதக்கம ஏற்கனவே வேறு ஒரு பெயரில் நாடகமாக நடிக்கப்பட்டு மக்களில் அமோக வரவேற்பை பெற்றதால் இந்நாடகமே "தங்கப்பதக்கம் என்ற பெயரில் படமாக்கப்பட்டது.

தங்கப்பதக்கம்



### 1974ம் ஆண்டில் சென்னை சினிமா இரசிகர் சங்கத்தின் விருதுகள் விபரம்



| | |
|---|---|
| படம்: | தங்கப்பதக்கம் |
| நடிகர். | சிவாஜி கணேசன் (தங்கப்பதக்கம்) |
| கதை: | மகேந்திரன் (தங்கப்பதக்கம்) |
| டைரக்டர்: | K. பாலச்சந்தர் (அவள் ஒரு தொடர்கதை) |
| நடிகை: | K.R. விஜயா (தங்கப்பதக்கம்) |
| துணை நடிகர்: | கமலஹாசன் (அவள் ஒரு தொடர்கதை) |
| துணை நடிகை: | சுபா (ராஜநாகம்) |
| குழந்தை நட்சத்திரம்: | பேபி இந்திரா (தேவி கருமாரி அம்மன்) |
| பின்னணி: | TMS, வாணிஜெயராம் |
| இசை: | M.S. விஸ்வநாதன் உரிக்குரல் |
| சிறப்புப் பரிசு: | அவள் ஒரு தொடர்கதை, தீர்க்க சுமங்கலி |

## நான் வாழப் போகிறேன்



-வீணை மைந்தன்

சுவடுகள் அடுத்த இதழில் தொடரும்



### சினிமாச் சிதறல்கள்

* கே பாலச்சந்தர் சினிமாவிற்கு வந்த படம் - தெய்வத்தாய் -1964
* கே. பாலச்சந்தர், ரஜினிகாந்தை வெளிப படுத்திய படம் - அபூர்வராகங்கள்-1975
* கே. பாலச்சந்தர் திரைக்கதை, வசனம், டைரக்சன் செய்த முதல் படம்-நீர்க்குமிழி
* கே. பாலச்சந்தர் கமலஹாசனை வெளிப்படுத்திய படம் - அரங்கேற்றம்
* கே. பாலச்சந்தர் ஸ்ரீதேவியை அறிமுகப் படுத்திய படம் -மூன்று முடிச்சு
* கே. பாலச்சந்தர் ராதாரவியை அறிமுகப்படுத்திய படம் - மன்மதலீலை
* சிவாஜியின் முதல்படம் பராசக்தி - 1952
* தமிழில் வந்த முதல் சினிமாப்படம் - காளிதாஸ் - 1931
* சிவாஜியின் 200வது படம் - திரிசூலம்
* 1931ஆம் ஆண்டிலிருந்து 1998 ஆம் ஆண்டுவரை வெளிவந்த
* தமிழ்படங்கள் சுமார் 4902
* கமலஹாசன் தோன்றிய படம் களத்தூர் கண்ணம்மா - 1960
* கமலஹாசன் 120 தடவைகள் பார்த்தபடம் - மதுரை வீரன்
* விஜயகாந்தின் முதல்படம் இனிக்கும் இளமை - 1979
* விஜயகாந்தின் 100வது படம் கேப்டன் பிரபாகரன் - 1991
* பிரபுவின் முதல் படம் சங்கிலி - 1982
* பிரபுவின் 100வது படம் ராஜகுமாரன் - 1994
* பாரதிராஜாவின் முதல் படம் - 16 வயதினிலே - 1977

### சினிமா நட்சத்திரங்களின் முதல் படம்


(கடந்த இதழின் தொடர்ச்சி)



விக்னேஷ் - சின்னத்தாயி
வடிவேலு - என் ராசாவின் மனசிலே
ஜெயமாலினி - சக்காளத்தி
தங்கவேலு - சதிலீலாவதி
அஞ்சலிதேவி - ரம்பா மேனகா
ரதி - புதியவார்ப்புகள்
ரஞ்சனி - முதல் மரியாதை
சிவரஞ்சனி - மனசார வாழ்த்துங்கள்
சுரேஷ் - பன்னீர் புஷ்பங்கள்
சாந்திகிருஷ்னா - பன்னீர் புஷ்பங்கள்
மோகன் - நெஞ்சத்தை கிள்ளாதே
சுஹாசினி - நெஞ்சத்தை கிள்ளாதே
ராமராஜன் - நம்ம ஊரு நல்ல ஊரு
சிம்ரன் - வி.ஐ.பி.
இந்து - இளவரசி
ராதாரவி - தண்ணீர் தண்ணீர்
சோனியா - மை டியர் குட்டிச்சாத்தான்
மீனா - நெஞ்சங்கள் (பேபி), ஒரு புதிய கதை
குஷ்பு - தர்மத்தின் தலைவன்
ரோஜா - செம்பருத்தி
சங்கீதா - பொர்ணமி நிலவில் (பேபி), புள்ளகுட்டிக்காரன்.




YARLCAN
STEAM CLEANING



உங்கள் சகலவிதமான
Cleaning
தேவைகளுக்கும்
அழையுங்கள்
மோகன்

Tel: 724-9085
Pager : 600 -0335
Cell: 721-9709

# 21ஆம் நூற்றாண்டில் கணணி இல்லாமல் மனிதன் வாழமுடியுமா?

-ராஜா சொக்கலிங்கம் raja@systemsplus.net
Computer Consultant



## பகுதி (6)

### Modem (மோடம்)


Modem என்ற இந்த வார்த்தையை தமிழ்ப்படுத்த நாம் விரும்பவில்லை ஏனென்றால் Modem என்ற சொல்லே ஒரு பெரிய சொற் தொடரின் சுருக்கம். Modulation Demodulation என்ற இரண்டு சொற்களில் உள்ள முதல் பகுதிகளான Mod, Dem என்ற இரண்டு சொற்களையும் சேர்த்து 'Modem' என்று அழைக்கப்படுகின்றது. மேற்கண்ட இந்த இரண்டு சொற்களின் பொருளே அதனுடைய வேலையை நமக்கு விளங்கப்படுத்தும். அதாவது Modulation என்பது இரண்டு மின் இயக்க அலைகளை கலப்பது. தேனீரில் சீனியைக் கலப்பது போல) Computer ஒரு மின் அலையை வேறு ஒரு மின் அலையுடன் கலந்து அதை தொலைபேசி (Telephone) இணைப்பு வழியாக வெளியே அனுப்புகின்றது. இது இந்த Modem த்தின் ஒரு பகுதி வேலை. அதேபோல வெளியில் இருந்து ரெலிபோன் இணைப்பு வழியாக வரும் மின் அலையை பிரித்து கணணியின் உபயோகத்திற்கு தொடுப்பது இதனுடைய மறுபகுதி வேலை. இவ் இரண்டையும் ஒரே Modem செய்வதால் இதை Modulation + Demodulation = modem என்பதை மறவாதீர்கள்.

இதனுடைய இயங்கும் வேகம் அதனுடைய மதிப்பு. அதாவது 14.4, 28.8, 33.6, 56K போன்ற வேகங்களில் பலவகையான Modem கள் வளர்ந்து வந்துள்ளன.

14.4 முதல் 56K BPS என்பது அதனுடைய அலகு. Bits per Second என்பது அதன் விளக்கம். ஒரு வினாடிக்கு எத்தனை துகள் (bit) களை அதனால் ஏற்றுமதி இறக்குமதி செய்ய முடிகின்றதோ அதைத் தான் 56K BPS (56000 BPS) என்று சொல்லுகிறோம்.

ஏன் 56K BPS ற்கு மேலாக தொலைபேசி இணைப்பு வழியாக பயன்படுத்தும் Modem வரவில்லை என நினைக்கலாம். நடைமுறையில் உள்ள தொலைபேசி இணைப்பில் அதிகப்படியான 40 முதல் 50K BPS வரை தான் பாவிக்க முடியும். எனவே தான் அதற்கு மேல் வேகத்தில் தயாரிப்புகள் வரவில்லை.


இதில் இரண்டு வகையுண்டு ஒன்று Internal மற்றையது external கணணிக்கு உள பொருத்தப்படுவது ஒன்றும் கணணிக்கு வெளியே உள்ளதுமான ஒன்றும் சொல்லலாம்.




தற்காலத்தில் புதிய தொழில் நுட்பமாக 1.4M BPS (14,000,000 BPS) இல் சிறப்பு தொலைபேசி இணைப்பு வழியாக வேலை செய்யக் கூடியதாக Bell Canada நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த சேவை எல்லா இடங்களிலும் கிடைக்க தேவையை விரிவுபடுத்தி வருகிறார்கள்.

அதே போல Shaw, Rogers cable நிறுவனத்தினர் தங்கள் Cable சேவை வழியாக 540 முதல் 1000K BPS வேகத்தில் Modem ஒன்றை இலவசமாக கொடுத்து செயல்படுத்துகிறார்கள்.

மேற்கண்ட இரண்டு சேவைகளிற்கும் தொலைபேசி இணைப்பிலான Modem தேவையில்லை. அவர்களின் வெளி (External) modem மும் கணணியில் ஒரு Network Cardம் போதுமானது.




பிற்காலங்களில் சேவையில் தொழில்நுட்பம் பெருகி உலகளாவிய தொலைக்காட்சியைக் கூட internet வழியாக நாம் கண்டு களிக்கலாம்.

சிறப்பாக இப்போதைய புதிய அறிமுகம் Wireless modem அதாவது நேரடியான எந்தவிதமான இணைப்பும் இல்லாமல் இயங்கக் கூடிய புதிய தொழில்நுட்பம்.

ஏன் இன்னும் ஒரு படிமேலே சென்று கை தொலைபேசியில் Modem இணைக்கப்பட்டு E-Mail சேவையையும் பெறக்கூடியதாக வெளிவந்துள்ளது.

கை தொலைபேசி சேவை அடுத்த கால கட்டத்தில் கை Internet இணைப்பாக வரப்போகின்றது. உங்கள் உள்ளங்கையில் உலக உருண்டை ஒன்றை வைத்துக் கொள்வீர்கள். இவை எல்லாவற்றிற்கும் இந்த Modem தொழில் நுட்பம் தான் ஆரம்பம்.

www.3com.com
http://mobile.yahoo.com

(தொடரும்)

**Safety Truck**
**Training School Ltd.**

Training & Trucking
Classes A, D & Z

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ்
TRUCK DRIVING பயிற்சி இடம் (6ம் ஆண்டு)
வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்

In Classes
- 365 (Learning Permit)
- Lock Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்
YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
(12 Years Canadian Experience with Trucks)
Tel: (416) 616-5979 / (905) 793-9546
250 Summerlea Road, Brampton, ON

**கலைமகள் புத்தக நிலையம்**

*சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
*தமிழ்ப் புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
*இலங்கை/இந்திய பத்திரிகைகள்
*குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
*CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 921-5018

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH, ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494

# விண்வெளி

சூரியக்குடும்பம்:- 28

தருபவர்:- கனி

பூமியை பொறுத்தமட்டில் சந்திரனின் தாக்கம் பலவகையிலும் பெரிய அளவில் காணப்படுகிறது. பூமிக்கு இந்தத் துணைக்கோள் இல்லாதிருந்திருக்குமே ஆயின் இன்று பூமியில் நாம்காணும் பல இயற்கையின் விளைவுகளைக் காணமுடியாதிருந்திருக்கும். ஏன் பூமியின் வானியல் சமநிலை கூட குளப்பிப் போய் உயிரினங்களே இல்லாதிருக்கும். இவ்வளவு அதிமுக்கிய சந்திரன் எப்படித் தோன்றியது என்பது பற்றிப் பார்ப்போம்.

புராணங்களும் இதிகாசங்களும் சந்திரனின் தோற்றத்திற்கு சில கதைகள் விளக்கங்கள் கொடுத்திருக்கக் கூடும். விண்வெளியையும், சூரியக்குடும்பத்தையும் ஆய்வு செய்தவர்கள் கூட இந்தச் சந்திரன் எவ்விதம் உருவெடுத்தது என்பதனைக் காலத்திற்குக் காலம் தத்தமது அறிவு நிலைக்கு ஏற்பக் கூறி இன்று யாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கொள்கைக்கு வந்துள்ளார்கள். சுவரசியமான அந்தக் கதையை இன்று பார்ப்போம்.

முதலில் சிலர் சந்திரனின் தோற்றத்திற்கு ஒரு பிரிகைக் கொள்கையைக் கூறினார்கள். அதன்படி சந்திரனானது பூமியில் இருந்து பிரிந்துபோன ஒருபகுதி என்பதாகும். Proto earth என்ற இளம் பூமியானது அதனது அபமிருதமான சுழற்சிகாரணமாக பிரிகையடைய - பூமியின் மேற்பகுதியில் இருந்து சிலபகுதி பிரிகையடைந்து வெளிச்செல்ல சந்திரன் உருவாகியது. இதன் காரணமாகவே சந்திரன் அடர்த்தி குறைந்ததாகவும் இரும்பு குறைந்ததாகவும் உள்ளது என்றார்கள். ஆனால் சந்திரனில் இருந்து பெற்ற பாறைகளில் உள்ள இரசாயண அமைப்புகள் எமது பூமியின் மேற்பரப்பில் உள்ள பாறைகளின் இரசாயண அமைப்பைப்போலல்லாது வேறுபட்டுக் காணப்பட இந்த கொள்கையானது ஏற்றுக் கொள்ளப்படாது போய்விட்டது.

அடுத்த கொள்கையானது ஒடுங்கல் கொள்கை. இதன்படி பூமியும் சந்திரனும் சூரிய நெபுலாவின் ஒரே இடத்தில் இருந்த தூசுக் கூட்டதில் இருந்து ஒரே நேரத்தில் ஒடுங்கியிருக்க வேண்டும். இக்கொள்கைகூட நிலைத்து நிற்கமுடியவில்லை. ஏனெனில் பூமியும் சந்திரனும் பௌதீக இயல்புகளில் நிரம்ப முரண்பாடானவை. அவற்றின் அடர்த்திகள் வித்தியாசமானவை, உட்கூறுகள் வித்தியாசமானவை. எனவே இதுவும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

அடுத்து ஆய்வாளர்கள் கொடுத்த கொள்கையின்படி சந்திரன் சூரிய நெபுலாவில் எங்கேயோ ஒரு இடத்தில் உருப்பெற்று - சூரியனை வலம் வந்து கொண்டிருக்கையில், பூமி தனக்கு அண்மையில் சந்திரன் வருகையில் தனக்குத் துணையாக பிடித்துக்கொண்டது என்பதாகும். இந்தக்கொள்கைகூட எடுத்த எடுப்பிலேயே அடிபட்டுப்போயிற்று - இதில் ஏராளமான தற்செயல் சம்பவங்கள் நடைபெற்றிருக்க வேண்டும் என்ற நிலை விஞ்ஞானிகளை சங்கடப்படுத்தியது. அத்துடன் பூமியை சந்திரன் வேறு எங்கேயோ இருந்து வந்து சந்தித்து இருக்குமேயாயின் பூமியினால் சந்திரனில் ஏற்படக்கூடிய “ரைடல் விசை” [முன்னர் குறிப்பிட்டிருந்தேன்] காரணமாக சந்திரன் உடைந்து துண்டுகளாகிப் போயிருக்கும். எனவே சந்திரன் தோற்றம் பற்றிய இந்தக்கதையும் எடுபடாமல் போயிருற்று.

எனவே 1980களின் நடுப்பகுதிவரை வானியல் ஆய்வாளர்களினால் சந்திரன் - அம்புலியின் தோற்றத்திற்கு சரியான விளக்கத்துடன் ஆன கதை ஒன்றினைக் கொடுக்க முடியவில்லை. இடைக்கிடை அம்புலி என்று ஒன்று இல்லவே இல்லை என்று தமது இயலாமையை நகைச்சுவையாகக் கூறிக் கொள்வார்கள். தொடர்ச்சியான ஆய்வுகளின் முடிவில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை கூறப்பட்டது. அக்கொள்கை பெரும் மோதல் கொள்கை எனக் கூறுவார்கள்.

இக்கொள்கையின்படி இரண்டு பெரிய கோள்துகள்கள் [சூரியக்குடும்பம் - 4ல் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது] சரிவாக ஒன்றை ஒன்று மோதி இணைய, மோதலின் காரணமாக சிதறிய பகுதி அம்புலியாகவும் பெரிய திணிவுடைய பகுதி பூமியாகவும் அடுத்த கட்ட மாறுதலின் பின்பு உருவாகின என்பதாகும். இக்கொள்கையானது பூமி-சந்திரன் அமைப்பின் பெரும்பகுதிப் புதிரை [ஏறக்குறைய எல்லாவற்றையுமே] தீர்த்து வைப்பதால் இக்கொள்கையானது இன்று எல்லா அறிவியலாளர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது.

மேலும் வரும் நாட்களில் சூரியக்குடும்பம் பற்றி இன்னமும் பார்ப்போம்

** எந்த மனிதனாலும் நேற்றைய தினத்தை இந்தப் பூமியில் எவ்வளவு தூரம் சுற்றி வந்தாலும் பிடிக்க முடியாது. ஆனால், இன்றைய தினத்தை நேற்றைய கவலைகளில் போக்காமல் சுறுசுறுப்பாக வாழமுடியும் முயன்றால் முடியும்.*
*- ராபர்ட் நாதன்*

** நம் சமத்துவ ஆர்வத்தில் ஒரே ஒரு சிக்கல். அது என்ன தெரியுமா? நம்மிலும் மேலோருடன் மட்டும்தான் நாம் சமத்துவம் பாராட்ட விரும்புகிறோம். -ஹென்றி பெக்யூ*



T. S. AUTO
SPECIALIST TOYOTA HONDA
MOTOR VEHICLE SPECIALISTS
FOR COMPLETE AUTO WORKS AND DETAILING

உள்ளூர், இறக்குமதி செய்யப்பட்ட சகல ரக வாகனங்களுக்கும் அனுபவம் வாய்ந்த மெக்கானிக்குகளால் சிறந்த முறையில் திருத்திக் கொள்ள நாடுங்கள்

- We Sell Quality Used Cars
- Licensed Mechanics on duty
- Guaranteed Services
- Reasonable Rates
- Free Visual Inspection and Proper Advice
- Licensed to do Air Condition Services
- We Rebuild Alternators & Starters
- Rust Proofing

TUNE - UP • BRAKES • GENERAL MAINTENANCE • ELECTRICAL WORKS • ALL KIND OF REPAIRS •

OIL & FILTER CHANGE WITH CASTROL GTX



Call: Kumar
Tel: (416) 293-3395 (416) 891-2893
2305 Markham Road #24, Scarborough, Ont. M1B 2W3

நகரின் மத்தியில் பெரியதோர் தமிழ் நிறுவனம்
செறண்டிப்
(F) பிறஸ் மார்க்கட்
நாளாந்த பாவனைக்கு தேவையான சகல பொருட்களையும் நாளாந்தம் மலிவு விலைகளில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

SERENDIB FRESH MARKET
Tel: (416) 269-9913
2631 Eglinton Ave. East, Scarborough, Ont. M1K 2S2

## நினைவில் நிலைத்து நிற்கவேண்டியவை


1. சீதை பிறந்த ஜனகபுரி இப்போது எந்த நாட்டில் உள்ளது?
   **நேபாள நாட்டில்**
2. மனிதனுக்கு அடுத்தபடியாக அறிவுள்ள பிராணி குரங்கு அதற்கும் அடுத்தபடியாக அறிவுள்ள பிராணி எது ?
   **பன்றி**
3. உலகம் முழுவதும் எத்தனையான கொசுக்கள் உள்ளன?
   **40,000 வகையான கொசுக்கள்**
4. கடிகாரத்தை யார், எப்போது கண்டுபிடித்தார்?
   **Paul Sylvester II (போல் சில்வெஸ்டர்II), 996 ஆம் ஆண்டு**
5. பாரதியாரின் இளம் பருவநண்பர் இன்னொரு பாரதி அவரின் முழுப்பயெர் என்ன? **சோம சுந்தரபாரதி**
6. இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனி எப்போது சரணடைந்தது?
   **1945 மே மாதம் 7ஆம் திகதி**
7. இங்கிலாத்து ஒலிபரப்பு நிலையமாகிய B.B.C (பிபிசி) அப்பொழுது அமைக்கப்பட்டது? **1922 ஆம் ஆண்டு**
8. உலகிலேயே ஒரே ஒரு உயிரினத்தால் மட்டும்தான் தலையை முழுவட்டமாக அதாவது 360 பாகைகளுக்கு சுற்றிப் பார்க்க முடியும். அந்த உயிரினம் எது?
   **ஆந்தை**
9. வாழும் உயிர்களை சார்ந்த, வேதியியல் நிகழ்சிகளையும் பற்றிய துறை (படிப்பு) எப்படி அழைக்கப்படும்?
   **Bio Chemistry (பயோ கெமிஸ்ரி)**
10. ஜெட் ( பிளேன்) விமானத்திற்கு பயன்படுத்தப்படும் எரிபொருள் எது?
   **கெரசின்**

தொகுப்பு: *-சீலன் ஜயாத்துரை, seelan y2k@email. com*

## Rules Of Life

Life is an Adventure, *Dare it.*
Life is Beauty, *Praise it.*
Life is a Duty, *Perform it.*
Life is Love, *Enjoy it.*
Life is a Tragedy, *Face it.*
Life is a Struggle, *Fight it.*
Life is a Promise, *Fulfil it.*
Life is a Game, *Play it.*
Life is a Gift, *Accept it.*
Life is a Journey, *Complete it.*
Life is a Mystery, *Unfold it.*
Life is a Goal, *Achieve it.*
Life is an Opportunity, *Take it.*
Life is a Puzzle, *Solve it.*
Life is a Spirit, *Realise it.*


VIVEKA Printers



உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும் முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்

80 Barbados Blvd., Unit #4,
Scarborougjh, Ont.

செ. ஸ்ரீதரன் - (416) 410-6401

EZ DRIVING SCHOOL



நவீன தன்னியக்க வாகனங்களில் சொந்த மொழியில் பயிற்சி விளக்கங்களுடன் அரச அனுமதி பெற்ற பயிற்சியாளரிடம் பயிற்சி பெற தொடர்புகொள்ளுங்கள்
JEYAKUMAR © (416) 283-4100
Cell: 822-6741 (10 வருடகால அனுபவ பயிற்சியாளர்)

KD FINANCIAL SERVICES
Vamadevan Jeyamohan (Jey)
(President)
Royal Bank Approved Third Party Referral Agent
VISA CARDS UPTO $5000
புதியவர்கள் (Fresh Credit) அல்லது நல்ல நிலையில் கிறடிற்றை (Good Credit History) வைத்திருப்பவர்களிற்கும் வேலை செய்யும் கடிதம் (Employment Letter) உடையவர்களிற்கும் விசா காட் எடுத்துத் தரப்படும்
Tel: (416) 431-9315 Fax: (416) 431-2119
Cell: (416) 575-8427 EmailL: Jeys@ica.net
தொடர்புகளுக்கு: weekdays - 5:30pm - 10:00 pm.

Nada Jeyadevan Financial Rep.
Tel: -(416) 398-4760 10:00Am - 8:00pm

RENOVATION
KATHIR & ASSOCIATES



* Complete Basement
* Bath Rooms
* Kitchen
* Plumbing
* Painting



போன்ற உங்களின் சகல விதமான திருத்த வேலைகளிற்கும் அழையுங்கள் : (416)804-5628



*சான்றோர் சொல்லமுதம்*

*வாழ்க்கை என்பது கடமைகளும் ஆசைகளும் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் ஒரு யுத்த களம்.*






# இடி - மின்னல்

இடி - மின்னல்! இந்த இரட்டை நிகழ்வுதோற்றப்பாட்டை அநுபவித்திராதவர் இல்லை எனலாம். இந்த இடி- மின்னல் எவ்வாறு நிகழ்கின்றது? வளிமண்டலத்தில் மேகக்கூட்டங்கள் உலாவருவது எமக்குத்தெரிந்ததே. அவ்விதம் காற்றில் மிதந்து வருகையில் ஒரு மேகக்கூட்டத்துடன் இன்னொரு மேகக்கூட்டம் உரசிக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. அச்சமயம் இடிமின்னல் ஏற்படுகின்றது எனச் சிலர் கூறுவார்கள். அதுவல்ல உண்மை. உரசல்களினால் மேகக்கூட்டங்களில் நிலைமின் ஏற்றங்கள் தோன்றுகின்றன. அத்துடன் மேகக்கூட்டங்களின் மேல் வலிமையான காற்றோட்டம் உரசிச் செல்கையிலும் இலத்திரனைக்கொண்ட எதிர்மின் ஏற்றங்களையும் வேறுசில இலத்திரன்கள் இல்லாத நேர்மின் ஏற்றங்களையும் கொண்டிருக்கும். இவையிரண்டும் அருகருகே வரும்போது இலத்திரன்கள் (எதிர்மின் ஏற்றம்) நேர்மின்னேற்றம் கொண்ட முகில்களை நோக்கிப்பாயும். இவ்விதம் பாய்கையில் மேகக்கூட்டங்களின் இடையே உள்ள வளியை கடக்கும்போது பெருமளவு சக்தியை இலத்திரன்கள் இழக்கின்றன. இச்சக்தியில் ஒருபகுதி ஒலியாகவும் ஒளியாகவும் மாற எமக்கு ஒலி இடிமுழக்கமாகவும், ஒளி மின்னலாகவும் தெரிகின்றது.




